**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்ணா காசிம்**

**தேதி 22.11.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் திறன்களை பயன்படுத்த வேண்டும் என குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதற்கான தருணத்தை ஜி-20 உச்சி மாநாடு ஏற்படுத்தும் என பிரதமர் நம்பிக்கை வெளியிட்டார்.

அடுத்த மாதம் 4 ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்யப்பட் விண்ணப்பங்களை அனைத்து வாக்காளர்களிடமும் பெற வேண்டும் என, புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் உத்தரவிட்டுள்ளார்.

வரும் 28 ஆம் தேதி வரை புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குடியரசு தலைவர் (14)

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு 2 நாள் பயணமாக இன்று ஆந்திர மாநிலம் சென்றடைந்தார். புட்டபர்த்தியிலுள்ள ஸ்ரீ சத்திய சாய் உயர் கல்வி நிறுவனத்தின் 44 ஆவது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராக பங்கேற்கும் அவர், பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபாவின்

நூற்றாண்டு விழாவை நினைவு கூறும் வகையில் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் இன்று நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். முன்னதாக, சாய் குல்பந்த் மண்டபத்தில் ஸ்ரீ சத்திய சாய்பாபாவிற்கு மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில், குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும், நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் திறன்களை பயன்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார். மேலும், அவர் கூறுகையில், ஆன்மீக அமைப்புகள், அமைப்பு சாரா நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் பொதுமக்கள் அனைவரும் 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடைய முக்கிய வகிக்க வேண்டும் என்றார்.

ஜி- 20-1 (4)

ஜி-20 உச்சி மாநாட்டிற்காக 3 நாள் பயணமாக பிரதமர் திரு நரேந்திர மோடி தென்னாப்பிரிக்கா சென்றடைந்துள்ளார். அவருக்கு அங்குள்ள இந்தியர்கள் பாரம்பரிய நடனங்களுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர். ஜி-20 நாடுகளின் உச்சி மாநாடு குறித்த மேலும் தகவல்கள்......

(வாய்ஸ்)

ஜி- 20-2 (16)

(வாய்ஸ்)

தென்னாப்பிரிக்காவின் ஜோகன்ஸ்பர்க் நகரில் உள்ள எக்ஸ்போ மையத்தில் ஜி-20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு இன்று தொடங்கியது. இம்மாநாட்டின் போது உலக தலைவர்களை சந்தித்து முக்கியமான உலக பிரச்சனைகளை விவாதிக்க தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி சமூக ஊடகத்தில் விடுத்துள்ள பதிவில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் திரு ஆன்டனி அல்பனிசுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் தங்கள் விரிவான கூட்டாண்மையில் 5 ஆண்டுகள் நிறைவு செய்யும் நிலையில்  இந்த பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. தொடர்ந்து, உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக, பிரதமர் இன்று சுமார்  3 இருதரப்பு சந்திப்புகளை நடத்த உள்ளது குறிப்பிடத் தக்கது.

இன்று நடைபெற்ற உச்சி மாநாட்டின் தொடக்க நிகழ்வில் பிரதமர் திரு நரேந்திர மோடி வசுதேவ குடும்பகம் எனும் ஒரு பூமி-ஒரு குடும்பம்-ஒரு எதிர்காலம் என்ற இந்தியாவின் தொலைநோக்கு பார்வையுடன்

ஜி- 20- 3 (7)

இணைக்கப்பட்ட உச்சி மாநாட்டின் நிகழ்ச்சிகளை வடிவமைக்கும் வகையில் உரையாற்றுகிறார். உச்சி மாநாட்டிற்கு வந்துள்ள ஜி-20

நாடுகளின் அனைத்து தலைவர்களையும், தென்னாப்பிரிக்க அதிபர் திரு சிரில் ராமபோசா தொடக்க உரையின்போது வரவேற்று பேசினார். உலகளாவிய சவால்களுக்கு பொதுவான தீர்வுகளை கண்டறிவதில் கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்புக்கான அர்ப்பணிப்பை இந்த கூட்டம் பிரதிபலிக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

மோடி(11)

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற ஜி-20 உச்சி மாநாட்டின் முதல் அமர்வில், பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றினார். ஜி-20 உச்சி மாநாட்டை ஆப்பிரிக்கா முதன் முறையாக நடத்தும் நிலையில் உலகளாவிய வளர்ச்சிக்கான அளவுகளை மறுபரிசீலனை செய்வதற்கும், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் இது சரியான தருணம் என பிரதமர் குறிப்பிட்டார். எந்த ஒரு அவசர காலத்திலும், அனைத்து ஜி-20 நாடுகளை சேர்ந்த பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்களின் குழுக்களை உருவாக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்றும், போதை பொருட்களில் அதிகரித்து வரும் சவால்களை சமாளிக்க ஜி-20 நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

*மன் கீ பாத்* (7)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 128 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 30 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11

மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை பொதுமக்கள் நமோ செயலி, மை-கவ் இணையதளம் மற்றும் 1800 11 7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாக வரும் 28 ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*பட்டேல்* (9)

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150 ஆவது பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் சர்தார் @ 150 ஒற்றுமையை பேரணியை மத்திய அமைச்சரும், பாஜக தலைவருமான திரு. ஜே.பி. நட்டா புதுடெல்லியில் இன்று கொடி அசைத்து தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் சர்தார்பட்டேலின் பாரம்பரியத்தை போற்றும் வகையில் நாடு முழுவதும் தொடர் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் சர்தார்பட்டேலுக்கு உண்மையான அஞ்சலி என்பது இளைஞர்களை ஒரே பாரதம் உன்னத பாரதம், விக்ஷித் பாரத், ஆத்ம நிர்பர் பாரத் நோக்கி நாட்டை வழி நடத்த ஊக்குவிப்பத்தில் உள்ளது என்று தெரிவித்தார்.

குலோத்துங்கன் 1 (4)

அடுத்த மாதம் 4 ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்யப்பட் விண்ணப்பங்களை அனைத்து வாக்காளர்களிடமும் பெற வேண்டும் என, வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கு புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். இதுகுறித்த மேலும் தகவல்கள்......

(வாய்ஸ்)

குலோத்துங்கன் 2 (13)

புதுச்சேரி மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி இம்மாதம் 4 ஆம் தேதி தொடங்கி, அனைத்து தொகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. இந்த பணியை மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியுமான திரு குலோத்துங்கன் இன்று லாஸ்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சாந்திநகர், குறிஞ்சி நகர், அசோக் நகர் உள்ளிட்ட பகுதிகளிலும், நெல்லித்தோப்பு, ராஜ்பவன், காமராஜ் நகர் தொகுதிகளிலும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் வாக்களார்களின் விவரங்களை செயலியில் பதிவேற்றும் செய்யும் பணியையும் பார்வையிட்டார். தொடர்ந்து, வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று வாக்குச்சாவடி அலுவலர்களால் பூர்த்தி செய்யப்பட்ட

விண்ணப்ப படிவங்கள் பெறப்படுவதையும் ஆய்வு செய்தார். இப்பணி டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி முடிவடைய இருப்பது குறிப்பிடத்தக்கது.

வானிலை (14)

தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவி வரும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை இன்று பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 28 ஆம் தேதி வரை இந்த நிலை தொடரும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஹாக்கி (14)

ஹாக்கி ஜூனியர் உலகக் கோப்பை தமிழகத்தில் சென்னை மற்றும் மதுரையில் நவம்பர் 28 முதல் டிசம்பர் 10ஆம் தேதி வரை நடைபெறுகிறது. ஹாக்கி விளையாட்டு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த உலகக்கோப்பை அறிமுக விழா மற்றும் சுற்றுப்பயணம் தொடக்க விழா இன்று காலை தனியார் மருத்துவ கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. ஆசியா ஹாக்கி கூட்டமைப்பு தலைவர் சந்திப்பு ஆனந்த் மற்றும் துணை தலைவர் சுவேதா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதல்வர் ரங்கசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஹாக்கி ஜூனியர் உலக கோப்பையை அறிமுகப்படுத்தி சுற்றுப்பயணத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நியமன சட்டமன்ற உறுப்பினர்கள் தீப்பாய்ந்தான், செல்வம், லட்சுமி நாராயணா மருத்துவ கல்லூரியின் சி.இ.ஓ.அன்பு, டீன் பாலகுருநாதன் உள்ளிட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் ஜூனியர் ஹாக்கி விளையாட்டு வீரர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தொழிலாளர் சட்டம் (10)

நாடு முழுவதும் 4 புதிய தொழிலாளர் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பாராட்டுத் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்த சட்டங்கள் தொழிலாளர்களின் வரலாற்றில் மிகப் பெரிய சீர்திருத்தத்தை கொண்டு வந்திருப்பதாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில் குறிப்பிட்டுள்ளார். இந்த சட்டங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், சமூக பாதுகாப்பு, பெண் தொழிலாளர்களுக்கு சம வாய்ப்புகள் மற்றும் வேலை மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை உறுதி செய்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

காரைக்கால் பேரணி (12)

புதுச்சேரி அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் காரைக்கால் நலவழித்துறை சார்பில் குழந்தைகளுக்கு பரவும் நிமோனியா காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில், பள்ளி மாணவ – மாணவியர் ஏராளமானோர் கலந்து கொண்டு நிமோனியா காய்ச்சல் குறித்த வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் சென்று, பொதுமக்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இப்பேரணியை புதுச்சேரி மாநில நிமோனியா நோய்க்கான ஒருங்கிணைப்பு திட்ட அதிகாரி டாக்டர் சுப்பிரமணியன் தலைமையில் காரைக்கால் நலவழித்துறை துணை இயக்குநர் டாக்டர் சிவராஜ்குமார் கொடியசைத்து தொடக்கி வைத்தார். பெரும்பாலும், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இந்த நோய் தொற்று அதிகம் பரவும் என்பதால் குழந்தைகளின் நிமோனியா நோயை கண்டறிய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பேரணியின் போது மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய ஒருமைப்பாடு வார விழா (6)

தேசிய ஒருமைப்பாடு வார விழாவை முன்னிட்டு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நலிவடைந்தோர் தின விழா இன்று காரைக்கால் திருப்பட்டினம் கோலகம் பகுதியில் உள்ள சமூதாய கூடத்தில்

நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், நிரவி திருப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் நாக.தியாகராஜன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

ஆரோவில் (8)

ஜெர்மன் நாட்டின் துணை தூதர் திரு மைக்கேல் ஹாஸ்பர் இன்று ஆரோவிலில் அதன் அறக்கட்டளை அலுவலகத்தை பார்வையிட்டார். ஆரோவில் மற்றும் ஜெர்மணி இடையிலான கலாச்சாரம், வளர்ச்சி, கல்வி மற்றும் இளைஞர் திறன் பரிமாற்றத் துறைகளின் ஒத்துழைப்பை ஆழப்படுத்தும் முன்னோட்டமாக இந்த வருகை அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. முன்னதாக, ஜெர்மன் நாட்டின் துணை தூதர் நேற்று புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசினார்.